தலைப்பு 227-ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 227–ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களைப் பதிவு செய்யும்திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதிஆம்கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025ஜூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை,நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கானகுறிப்பு 01இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்கஅனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில்எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந்திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம்ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின்,பொதுத் திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாடுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது.அதனால்,இந்த

நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந்திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும்நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்ககூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல்கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம்திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன.தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமான பெறுவனவு

திணைக்களத்தின் வருமான பெறுவனவுகள் கணக்கீடு செய்ததில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்கான ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் புகைப்பட நிலையங்கள் பதிவு செய்வதன் மூலம் உழைக்கப்பட்டிருந்த ரூபா 6,534,356 இற்கான வருமானம் ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் 2003.02.03 வருமானத் தலைப்பின்	2024 ஆண்டின் புகைப்பட நிலையங்களை பதிவு செய்யும் வருமானம் சேகரித்தல் 2003.99.00 வருமானத் தலைப்பின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், பல்வேறு சந்தர்ப்பங்களில்	திணைக்களத்தின் வருமானத் தலைப்பு 2003.02.03 இன் கீழ் செலவு வைக்கப்பட வேண்டும்.

	கீழ் செலவு வைக்கப்படாமல் ஏனைய பெறுவனவுகள் வருமானத் தலைப்பு 2003.99.00 கீழ் செலவு வைக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது அந்த வருமானம் 2003.02.03 வருமானத் தலைப்பின் கீழ் சேகரிக்கப்படும் என. அதன்படி, 2025 ஆண்டு முதல் அந்த வருமானம் 2003.02.03 தலைப்பின் கீழ் சேகரிக்கப்பட வேண்டும் என கணக்கீடு செய்வதற்கு உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்வதில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் கூற்றில் (SA-82) KB–8577 என்ற வாகனம் இரு தடவைகள்பதிவு செய்திருந்தமையால் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றுரூபா 3,400,000 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	KB– 8577 என்ற வாகனம் 2017.01.01 திகதி ரூபா 3,400,000 இற்கான பெறுமதியொன்றின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2021.12.31 திகதி மீண்டும் அதனை மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,390,000 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த சொத்தினை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யும் போது தவறுதலாக இவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்ததென அறிவிப்பதுடன், விரைவாக அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.	சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த பண்டக் கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்டிருந்த அப்புறப்படுத்த வேண்டிய பண்டங்கள் இடையே 2024 ஏப்ரல் 26 திகதி ஏலவிற்பனையின் மூலம் 08 வகையான சொத்துக்களை சேர்ந்த 64 விடயங்கள் மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள்கூற்றில் (SA-82) அப்புறப்படுத்தல்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.	E-NIC செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு வழங்கியிருந்த சொத்துக்களை பதிவு செய்யும் போது வழுக்கள் காணப்படுவதுடன், இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களும் இதன் கீழ் இனங்கண்டிருந்தமையால், தற்போது இந்த வழுக்களை சரி செய்வதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு	சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.

		வருகின்றதெனவும், அதன்படி, இந்த விடயங்கள் சரியாக சிகாஸ் கணக்கீட்டு முறைமையில் கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	
(iii)	ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 02 வேன் வண்டிகள் மற்றும் மோட்டார் கார் ஒன்று சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.	இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது E-NIC செயற்திட்டத்தின் கீழ் காணப்படுவதுடன், அங்கு NB– 4809 மற்றும் NB– 4840 இலக்கம் கொண்ட 02 வேன் வண்டிகளும் இவ்வாண்டு சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும்,CAQ– 5803 மோட்டார் கார் வண்டியினை விரைவாக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது.	சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம்,பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்காக ஏனைய திணைக்களங்களினால் சேகரிக்கப்பட்டுள்ள வருமானம் திறைசேரி அச்சுப் பதிவின் படி ரூபா 461,335,376 தொகை மற்றும் வருமானம் உழைத்தல் தொடர்பான முன்னேற்ற அறிக்கையின் படி ரூபா 462,755,280 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,419,904 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	திறைசேரி அச்சுப் பதிவில் உட்படுத்தப்பட்டுள்ள வருமானங்கள் பிரதேச செயலகங்கள் மூலம் உண்மையாகவே சேகரிக்கப்பட்ட வருமானங்கள் மாத்திரமாகும். ஆனால் வருமான முன்னேற்ற அறிக்கையில் பிரதேச செயலகங்களினால் சேகரிக்கப்பட்டு காசோலைகள் மூலம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்ற வருமானங்கள் (நடமாடும் சேவை வருமானங்கள் உட்பட) ஏனைய திணைக்களங்கள் மூலம்	ஏனைய திணைக்களங்களினால் சேகரிக்கப்படும் வருமானம், கணினி அச்சுப் பதிவின் படி சமமாக இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	சேகரிக்கப்படும் வருமானம் என கணித்து தயாரிக்கப்பட்டிருப்பதனால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. ஏனைய வருமானங்கள் அதாவது நடமாடும் சேவை வருமானங்களும், முன்னேற்ற அறிக்கையில் வருமானத்துடன் கூட்டப்படுகின்றது. அதன் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்தது.	

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டிற்கான மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 2,855,955,000 தொகையாக காணப்பட்டதுடன், திறைசேரி அச்சுப் பதிவின் படி (SA–10) படி மொத்தச் செலவு ரூபா 1,988,220,703 ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த சேமிப்பு ரூபா 867,734,297 தொகை எனப்படும் மொத்த தேறிய ஏற்பாடுகளில் 30 சதவீதமாக காணப்பட்டது.	மொத்த தேறிய ஏற்பாடுகளில் ஒட்டுமொத்த சேமிப்பாகிய ரூபா 867,734,297 இனுள் பிரதானமாக பின்வரும் செலவு விடயங்களில் சேமிப்பு அடங்குகின்றது. • முன் அச்சிடப்பட்ட பொலி காபனேட் அட்டைகளுக்கான 227-01-01-0-2509 செலவு விடயத்தினுள் ரூபா 694,398,196 தொகை அட்டைகள் கொள்வனவு செய்யும் பெறுகை இரத்துச் செய்யப்பட்டமையால் சேமிக்கப்பட்டிருந்தது. • 227-01-01-0-1201 காகிதாகிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் செலவு விடயத்தில் ரூபா 62,441,438 தொகை எதிர்பார்த்த செவுகள் ஏற்படாமையால் சேமிக்கப்பட்டது. • 227-01-01-0-1403 மின்சாரம் மற்றும் நீர் செலவு விடயத்தினுள் ரூபா 15,661,807 தொகை பில் பத்திரக் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டமையால் சேமிக்கப்பட்டிருந்தது. • சேவை உடன்படிக்கைகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் உடன்படிக்கை மேற்கொள்ளாமையால் 227-01-01-0-1409-138 செலவு விடயத்தில் ரூபா 23,201,322 தொகை சேமிக்கப்பட்டது.	திணைக்களத்தினால் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது போதிய கவனத்துடன் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	05 மீண்டுவரும் செலவு விடயங்களில் மற்றும் மூலதனச் செலவு விடயம் ஒன்று தொடர்பாக மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 1,110,885,280 இற்கான தொகையில் ரூபா 764,467,077 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு	வெளிநாட்டு பிரயாணங்கள் வரையறுக்கப்படல், எதிர்பார்த்தவாறு செலவுகள் ஏற்படாமை, தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட்டமையால் மின்பிறப்பாக்கிகள் பயன்படுத்தல் குறைவடைதல், உடன்படிக்கை	செலவு விடயங்திற்காக போதிய கவனம் செலுத்தி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

	இறுதியில் உள்ளவாறு சேமிப்பாக காணப்பட்டதுடன், அந்த சேமிப்பு 41 சதவீத்திலிருந்து 84 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	இரத்துச் செய்யும் ஆபத்தினை கவனம் செலுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட பாதுகாப்பு நிதியம் பயன்படுத்துவற்கு தேவைப்பாடு காணப்படாமை, கூறுவிலைகள் அழைக்கப்பட்ட போதும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட குறைந்த தொகைக்கு நிறுவனம் ஒன்றை தெரிவு செய்ய முடியுமானவை, முன் அச்சிடப்பட்ட பொலி காபனேட் அட்டவணைகள் கொள்வனவு செய்யும் பெறுகை இரத்துச் செய்யப்பட்டதுடன், மீண்டும் கட்டளையொன்றின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை, காட் பத்திரங்களின் எண்ணிக்கை கொண்டிருந்த பெறுமானத்திற்காக இந்த ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்துடன், மீதித் தொகை 2025 ஆண்டில் செலுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	
(இ)	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் முடிந்த அளவு முழுமையாக மற்றும் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், அவ்வாறு மாற்றப்பட்டிருந்த மேலதிக ஏற்பாடுகள் மதிப்பீட்டு ஏற்பாடுகளின் 32 சதவீதம் முதல் 117 சதவீத வீச்சில் காணப்பட்டமையால் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது போதிய கவனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பொது நிருவாக உள்நாட்டு விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 03/2024 இலக்கம் கொண்ட மற்றும் 2024/01/10 திகதிய சுற்றறிக்கை அறிவுரையின் படி நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு செலுத்துவதற்காக தேக்க வாகனங்களுக்காக எரிபொருள் செலவு சிறந்த முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட்டமையால் இந்த செலவு விடயத்தில் சேமிப்பு ஏற்பட்டது. சீருடை கொடுப்பனவு பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை சீருடை கொடுப்பனவு எதிர்பார்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவடைதல் பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டிருந்த அடையாள அட்டை அலகுகளின் பராமரிப்புச் செலவு எதிர்பாராத விதமாக அதிகரித்தல் தொழிற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வேன் வண்டிகள் தொடர்ந்தும் சேவைக்கான தேவைப்பாடு ஏற்படாமையால் அந்த வண்டிகளை மீண்டும் ஒப்படைத்தல் 2024 ஆண்டிற்காக எமது	போதிய கவனத்துடன் மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக பொறுப்பாக இருக்க வேண்டும்.

		திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதியை விட குறைவான ஏற்பாட்டு எண்ணிக்கையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் இந்த செலவு விடயத்தின் கீழ் 2024 ஆண்டிற்காக மதிப்பிடப்பட்டிருந்த கிராம உத்தியோகத்தர் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமை போன்ற விடயங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூன்று பிரதான செயலாற்றுகை சுட்டிகளில் (KPIs) பிரதான சுட்டியொன்றான "வருடாந்த வழமையான சேவையின் கீழ் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை" மீளாய்வாண்டின் போது 21 சதவீதமொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், 2024 வரைவு செயலாற்றுகை அறிக்கையில் மேற்கூறிய செயலாற்றுகை சுட்டியின் சதவீதம் 75 – 89 இற்கு இடைப்பட்டிருந்தது என அறிக்கையிடப்பட்டிருந்தது.	வழமையான சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்காக அவர்களின் தேவைப்பாட்டை கவனம் செலுத்தி தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதுடன், நிலவுகின்ற அட்டைகளின் பற்றாக்குறை காரணமாக அச்சிடுதல் கட்டம் வரையான கருமங்கள் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களுக்காக தேசிய அடையாள அட்டையின் தகவல்களை உட்படுத்தி தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக பயன்படுத்தக் கூடியவாறு தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதமொன்று வழங்கப்பட்டது. அதன்படி, 2024 ஆண்டிற்குரிய வரைவு செயலாற்றுகை அறிக்கையில் வருடாந்த வழமையான சேவையின் கீழ் கிடைத்திருந்த விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டைகளின் சதவீதம் 75 – 89 என காட்டப்பட்டிருந்தது. அந்த	வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் (card) எண்ணிக்கையின் அடிப்படையில் செயலாற்றுகை சுட்டி தயாரிக்கப்பட வேண்டும்.

		ஆண்டில் வழங்கப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டைகள் மற்றும் தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையாகும் என கருணையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.	
(ஆ)	2016 இன் 08 ஆம் இலக் க ஆட்களை பதிவு செய்யும் (திருத்திய) சட்டத்தின் பிரிவுகள் 5(2)(1) மற்றும் 15(14) இன் படி இலங்கை பிரஜையொருவர் ஆகிய மற்றும் 15 வயதை அணுகிய போது அல்லது அணுகுகின்ற அனைத்து நபர்களுக்கும் ஆணையாளர் நாயகத்தினால் செய்முறை ரீதியாக கூடிய விரைவில் அந்த நபருக்கு தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும், 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு தேசிய அடையாள அட்டை வழங்கப்படாத விண்ணப்பங்கள் 1,055,461 தொகை காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு 985,209 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தமையால் மொத்த விண்ணப்பங்கள் 2,040,670 தொகைக்காக தேசிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்ாவண்டின் போதும் வழங்கப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 431,960 ஆகும். 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படாத விண்ணப்பங்கள் 1,608,710 தொகை காணப்பட்டதுடன், அத்தினத்தில் உள்ளவாறு திணைக்களத்தில் காணப்பட்ட முன் அச்சிடப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை 667,820 தொகை மாத்திரமே ஆகும். அதன்படி, போதியளவு முன் அச்சிடப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை	தேசிய அடையாள அட்டைகள் அச்சிடுவதற்காக முன்அச்சிடப்பட்ட அட்டைகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பல பெறுகைகள் திணைக்களத்தின் புறம்பான விடயங்கள் காரணமாக இரத்தாகியிருந்தமையால் தேசிய அடையாள அட்டை அச்சிடுவதற்காக போதியளவு முன்அச்சிடப்பட்ட அட்டைகளின் இருப்பொன்று பேணிச் செல்ல முடியாமல் இருந்தது. அதன் காரணமாக 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் பிறந்த பாடசாலை விண்ணப்பதாரிகளுக்காக தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் வழங்கப்பட்டன. ஒருநாள் சேவையின் மூலம் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கல் மேற்கொள்ளப்பட்ட போதிலும், முன் அச்சிடப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கையை முகாமைத்துவம் செய்து மேற்கொள்ளப்பட்டமையால், வழமையான சேவைக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்பத்திரங்களுக்காக தேர்தலில் வாக்களிப்பதற்காக பயன்படுத்தக்கூடியவாறு தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் வழங்கப்பட்டது. அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் படி மீண்டும் கட்டளை ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ளும் முன் அச்சிடப்பட்ட அட்டைகள்	அடையாள அட்டைகள் வழங்குதவற்காக போதியளவு வெற்று அட்டைகளின் இருப்பு மட்டத்தை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திணைக்களத்திடம் காணப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு 588,402 தொகை தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தது.	தற்போது திணைக்களத்திற்கு கிடைப்பதனால் 2005/02/01 தொடக்கம் 2006/01/31 திகதி வரை பிறந்த பாடசாலை விண்ணப்பதாரிகளுக்காக தற்போது தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன். மேலும், கணினி முறைமையில் உள்ளீடு செய்து ஒரு மாதம் கடந்துள்ள விண்ணப்பத்திரங்களுக்காக விண்ணப்பதாரிகளின் தேவைப்பாட்டை கவனம் செலுத்தி தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றதென கருணையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.	

4.2 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவராக கடமையாற்றிய திரு. J.M. புத்தி அவர்கள் 2017 ஆகஸ்ட் 29 திகதி சேவையை விட்டு விளகிச் சென்றுள்ளார். 2014/2015 பாதீட்டு முன்மொழிவுகளை செயற்படுத்தலின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்காக மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் போது அவரினாலும் மோட்டார் சைக்கிள் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்துடன், அவர் அதனை பெற்று 05 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் சேவையை விட்டு விளகிச் சென்றிருந்தமையால், தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் BD/GPS/130/9/14/MC- II இலக்கம் கொண்ட மற்றும் 2025 ஜுலை 07 திகதிய கடிதத்தின் பிரகாரம் அவரிடம் மோட்டர் சைக்களின் சந்தைப் பெறுமதியான ரூபா 144,920 இற்கான தொகை	இந்தப் பெறுமதி தற்போது இந்தத் திணைக்களத்தின் பெறுமதியொன்றென உட்படுத்தியிருக்காததுடன், அதனை நட்டமென இனங்காணும் முறை தொடர்பாக தெளிவினை பெற்றுக்கொள்வதற்காக அல்லது அதனை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கான அறிவுரைகள் பெற்றுக்கொள்வதற்காக அரச கணக்குத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் இணக்கமொன்று பெற்றிருந்ததுடன், அதன்படி செயற்படுத்துவதற்காக உரிய உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் ஊடாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், அவ்வாறு அறவீடு செய்தல் அல்லது ஏடுகளில் இருந்து பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அது தொடர்பான தகவல்கள் ஏதும் 2024 நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.3(ஆ) பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக் கூட்ட அறிக்கையின் ஏதேனும் அங்கத்துவர் தான் இணங்கவில்லை என குறிப்பிட முடியுமாக இருந்ததுடன்,75 குறியீடு வாசிப்பு இயந்திரங்கள் (QR reader) ரூபா 2,025,000 (வரியின்றிய) பெறுமதிக்கு கொள்வனவு செய்தல் தொடர்பாக 2024 பெப்ரவரி 05 திகதி நடைபெற்ற 01 ஆவது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கையில் தலைவரினால் இணங்குவது அல்லது இணங்காமை என குறிப்பிடாமல் கையொப்பமிடப்பட்டிருந்தது.	தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கையில் இணங்குகின்றேன் அல்லது இணங்கவில்லை என குறிப்பிடாமை தவறுதலாக ஏற்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் அவ்வாறான தவறுகளிலிருந்து தவிர்ந்து கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன்.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம செயற்பட வேண்டும்.

4.4 முகாமைத்துவநலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2016 இன் 08 ஆம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் சட்டத்தின் மூலம் திருத்திய 1968 இன் 32 ஆம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் சட்டத்தின் பந்தி 39(ஆ) மற்றும் (இ) இற்கு இணங்க திணைக்களத்தின் ஏதேனும், குறிப்பிட்ட அதிகாரம் ஒன்றினால் மேற்கொள்ளப்படுகின்ற எழுத்துமூல விண்ணப்பமொன்றிற்காக தேசிய அடையாள அட்டை	2016 இன் 08 ஆம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் திருத்திய சட்டத்தின் படி தேசிய அடையாள அட்டைகள் வைத்திருப்பவரின் விருப்பத்தை பெற்றுக்கொண்ட பின்னர் தனிப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்த வேண்டும். உடன்படிக்கை மேற்கொண்டிருந்த நிறுவனம் அந்த சேவையை பயன்படுத்தும் போது வைத்திருப்போரின் விருப்பம்	சட்டத்தின் படி செயற்பட வேண்டும்.

வைத்திருப்போரின் விருப்பத்துடன் அந்த அடையாள அட்டைகளை வைத்திருப்போரின் விபரங்களின் உண்மைத் தன்மையை சான்றுபடுத்தக்கூடியதாக இருந்ததுடன், திணைக்களத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்கு (MOU) அணுகி நிறுவனத்தினால் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொண்டோரின் விருப்பத்தை பெற்றுக்கொண்ட பின்னர் தகவல்களை உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், உடன்படிக்கை மேற்கொண்டிருந்த நிறுவனத்தினால் ஆட்களின் தகவல்களை உறுதிப்படுத்திய போது தேசிய அடையாள அட்டை வைத்திருப்போரின் விருப்பம் உண்மையாகவே பெறப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக திணைக்களத்தினால் தெரிவுப் பரிசோதனையொன்று இந்த சேவையின் ஆரம்பம் முதல் கணக்காய்வுத் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்ததென கணக்காய்வில் தகவல்கள் கண்டறியப்படவில்லை.

பெறப்பட்டதா என பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படாமை தொடர்பாக பின்வரும் விடயங்களை அறிவிக்கின்றேன்.

i. 2016 இன் 08 ஆம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் திருத்திய சட்டத்தின் படி தேசிய அடையாள அட்டை வைத்திருப்பவரின் விருப்பத்தை பெற்றுக்கொண்ட பின்னர் தனிப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆட்களின் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களத்தினால் 2020 ஆண்டின் போது web portal ஊடாக தனிப்பட்ட தகவல்கள் பரிமாரல் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2024 ஆண்டின் போது API ஊடாக தகவல் பரிமாறும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. தனிப்பட்ட தகவல்களை பரிமாருவதற்காக தற்போது 110 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டுள்ளது.

ii. சேவையை வழங்குவதற்கு முன்னர் அனைத்து நிறுவனங்களினாலும் திணைக்களத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடப்படுவதுடன், தனிப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு முன்னர் தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பரின் விருப்பத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என அந்த நிபந்தனைகளில் அடங்குகின்றது. குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கடவுச்சொல் வழங்குவதற்கு முன்னர் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் குறிப்பிட்ட நிறுவனம் விண்ணப்பத்தின் மூலம் அல்லது online Interface ஒன்றின் மூலம் அட்டைகளை வைத்திருப்போரின் விருப்பத்தை பெற்றுக்கொள்ளும் முறையினை பரிசோதனை

		செய்து உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. iii. எதிர் காலத்தில் API சேவையின் மூலம் தரவு பரிமாறுவதற்காக எதிர்பார்க்கப்படுவதுடன், சேவையை வழங்கும் நிறுவனம் தொடர்ச்சியாக பரிசோதனை மேற்கொள்வதற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவுடன் தொடர்பு கொண்டு நிறுவனம் சட்டரீதியாக அட்டையினைவைத்திருப்போரின் விருப்பத்தை உரிய முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டதா என இடையிடையே பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	
(ஆ)	உத்தியோகத்தர் ஒருவரின் 10 வருடங்களை மிகைத்துள்ள அறவிடப்பட வேண்டிய இடர் மற்றும் துவிச்சக்கர வண்டி கடன் மீதி ரூபா 45,413 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் தீர்த்துக்கொள்வதற்கு திணைக்களத்திற்கு முடியாமல் இருந்தது.	இந்த உத்தியோகத்தரின் முற்பண ‘பீ’ கணக்கின் கடன்மீதியை அறவீடு செய்வதற்காக வழக்கு இலக்கம் 1689/18 DMR கீழ் 2018.04.27 திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2025.04.28 திகதி நடைபெற்ற வழக்கு தவணையின் போது இந்த வழக்குத் தொடர்பாக குறிப்பிட்ட எதிராளிக்கு விரோதமாக அழைப்பாணை அழைக்கப்பட்டுள்ளதுடன், 2025.10.17 திகதி அடுத்த வழக்குத் தவணை தினத்தில் மாவட்ட நீதிமன்றப் பதிவாளரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2025.10.17 திகதிக்கு வழக்கு பிற்போடப்பட்டது.	விரைவாக கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1472 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 1321 ஆக காணப்பட்டமையால் 151 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது.	i. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இந்த திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் சரியானவை. ii. இணைந்த சேவைக்குரிய பதவிகள் தொடர்பாக 2024.12.31 திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர்கள் நாயகத்திற்கு கடிதம் மூலம் கோறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. iii. மேலும், 2024.12.31 திகதியில் உள்ளவாறு நிலவுகின்ற மேலதிக ஆணையாளர் நாயகத்தின் வெற்றிடம் 01 தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன், பிரதி /உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய மற்றும் திணைக்களம் சார் ஏனைய பதவிகளின் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்க மற்றும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அறிவுரையின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்வததற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென கருணையுடன்	திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேவை மட்டம்	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை	2024.12.31 திகதியில் உள்ளவாறு உள்ளவாறான எண்ணிக்கை	வெற்றிட எண்ணிக்கை
சிரேஷ்ட	31	23	8
மூன்றாம் தர	4	3	1
இரண்டாம் தர	1,288	1,192	96
ஆரம்ப	149	103	46
மொத்தம்	**1,472**	**1,321**	**151**

		அறிவிக்கின்றேன்.	
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம், பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) மற்றும் சட்ட உத்தியோகத்தர் உட்பட 08 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையே வெற்றிடமாக காணப்பட்டது.	i. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இந்த திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் சரியானவை. ii. இணைந்த சேவைக்குரிய பதவிகள் தொடர்பாக 2024.12.31 திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர்கள் நாயகத்திற்கு கடிதம் மூலம் கோறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. iii. மேலும், 2024.12.31 திகதியில் உள்ளவாறு நிலவுகின்ற மேலதிக ஆணையாளர் நாயகத்தின் வெற்றிடம் 01 தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன், பிரதி / உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய மற்றும் திணைக்களம் சார் ஏனைய பதவிகளின் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்க மற்றும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அறிவுரையின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்வததற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென கருணையுடன் அறிவிக்கின்றேன்.	திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.